**நான்காம் கட்டம்-2ல்** ஒரு உபநதிப் படுகையான அமராவதி உபநதி படுகையில் இத்திட்டம் 2012-13ல் விரிவுபடுத்தப்பட்டு செயலாக்கப்பட்டது.



## 5. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (டான்ஹோப்)

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப்பயிர்களில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983ன்படி 1994 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் இதன் ஆட்சியராகவும், தோட்டக்கலை இணை இயக்குநர் இதன் நிர்வாக இயக்குநராகவும் உள்ளனர். தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் உறுப்பினர் சந்தாவாக ரூ.100 வீதம் செலுத்தி இதுவரை 3,906 பேர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

### இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள்

1. தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிப்பது
2. பழங்கள், காய்கறிகளை நவீன முறையில் வினியோகம் செய்ய வழிவகை செய்யும் வகையில் தரம் பிரித்தல் மற்றும் ஏற்றுமதிக்கான வசதிகளை ஏற்படுத்துதல்
3. கூட்டுறவு முறையில் சில்லரை விற்பனை கடைகள் மூலம் விற்பனை மேற்கொள்ளுதல் மற்றும் அறுவடை முடிந்தவுடன் பதனிடப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்தல்.

### 1. செயல்பாடுகள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக செயல்படுத்தப்படும் பல்வேறு தோட்டக்கலை திட்டங்களுக்குத் தேவையான நடவுச் செடிகள், காய்கறி விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை டான்ஹோப் கொள்முதல் செய்து, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகிறது. அரசாணை எண்.444 வேளாண்மை (தோக1) துறை நாள் 30.10.2007–ன்படி,

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, டான்ஹோப்பினை தோட்டக்கலை திட்டங்களுக்குத் தேவையான நடவுச் செடிகள், விதைகள் மற்றும் இடுபொருட்கள் கொள்முதல் செய்யும் நிறுவனமாக பயன்படுத்தி வருகிறது. மேலும் டான்ஹோப், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் கோயமுத்தூரில் செயல்பட உள்ள பெருநகர காய்கறி தொகுப்பு திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

அதிகரித்துவரும் நகர்ப்புற சந்தைகளுக்கு காய்கறிகளைத் தொடர்ந்து விநியோகம் செய்வதை உறுதிசெய்வதற்கு, கிராமப்புறப்பகுதிகளுக்கும், நகர்ப்புறப் பகுதிகளுக்கும் இணைப்பினை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதனால், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்கு நிலையான வருமானம் கிடைப்பது உறுதிசெய்யப்படும். மாவட்ட அளவில் விவசாயிகளால் நடத்தப்படும் இணையத்திற்கு விளைபொருட்களை அனுப்பும்வகையில் விவசாயிகள் குழுக்கள் அமைக்கப்படும். கிராமங்களிலேயே விளைபொருட்களைச் சேகரித்து, தரம்பிரித்து, கொள்கலன்களில் அடைத்து நகர்ப்புறங்களில் உள்ள சில்லரை விற்பனையாளர்களுக்கு அனுப்புவதற்கு தனியார் நிறுவனதாரர்கள் அமர்த்தப்படுவார்கள். இத்திட்டம் பொது மற்றும் தனியார் பங்கேற்பில் செயல்படுத்தப்படும். காய்கறிகள் சாகுபடி, விவசாயிகள் குழுக்கள் அமைத்தல், விவசாயிகள் இணையம் அமைத்தல், சேகரிப்பு மையங்கள், போக்குவரத்து வாகனங்கள், சில்லரை விற்பனையாளர்கள், நடமாடும் விற்பனை நிலையங்கள் முதலியன இத்திட்டத்தின் அம்சங்களாகும். சென்னை நகரத்திற்கான திட்டத்தினை செயல்படுத்துவதற்காக சென்னை தோட்டக்கலை விளைபொருட்கள் உற்பத்தியாளர்கள் கம்பெனி லிமிடெட் என்ற உற்பத்தியாளர் கம்பெனி ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டம் சென்னை நகரில் செயல்படுத்திட ரூ.1700 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4970 விவசாயிகள் கொண்ட 254 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு



வங்கிக்கணக்கு துவக்கப்பட்டுள்ளது. 500 விவசாயிகளுக்கு சாகுபடி மானியமாக ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2012–13ஆம் ஆண்டில் கோவை நகரத்தில் 2162 எக்டர் பரப்பளவில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1700 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.